# கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை

## பாடம் - 2

இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மைக் குறித்தான கேள்விகள் அன்றிலிருந்து இன்றுவரை இருக்க செய்கின்றன. ஆதி திருச்சபை நாட்களிலே இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையைக் குறித்த கோட்பாடுகள் பலரால் ஏற்படுத்தப்பட்டது. அது இன்றுவரை பல திருச்சபைகளில் பலர் பலவிதமாய் சொல்லுகிறதற்கு இடம் கொடுத்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் அல்ல அவர் ஒரு தீர்க்கதரிசி என்று இஸ்லாமியர்களும், இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு சரிசமமானவர் அல்ல, தேவனை விட சற்று தாழ்வானவர் என்று யெகோவா சாட்சிகள் கூறுகின்ற கருத்துகளைப் பற்றி நமக்குத் தெரியும் அல்லவா?

இறையியல் வரலாற்றிலும் கூட கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைக் குறித்து பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன, அவைகளை நாம் அறிந்து கொள்ள இருக்கின்றோம்.

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்?

- கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை நாம் அறிந்து கொள்வதே நம்முடைய விசுவாச வாழ்வின் அடிப்படையாகும்.
- எல்லா இறையியல் கோட்பாடுகளை விட, எல்லா உபதேசங்களை விட இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையானது மிகவும் சிறப்பானதும் முக்கியத்துவம் நிறைந்ததும் அடிப்படையானதுமாய் இருக்கின்றது என்பதை நாம் கவனம் கொள்ள வேண்டும்.
- இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைக் குறித்து அநேகர் கொண்டிருந்த வித்தியாசமான கருத்துகளின் அடிப்படையிலே தான் அநேக பிரிவுகள், கொள்கையின் அடிப்படையிலான மார்க்கபேதங்கள் உண்டாயிருக்கிறதை நாம் பார்க்கின்றோம்.
- கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை என்கிற இந்த இறையியல் கோட்பாட்டை நாம் அறிந்து கொள்வதே. மற்ற எல்லா இறையியல் கோட்பாட்டையும் நாம் கற்றுகொள்வதற்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கின்றது. இறையியல் கோட்பாடுகள் அனைத்தையும் அறிவதற்கு

இந்த இயேசுவின் தெய்வீகத்தன்மை என்கிற இறையியல் கோட்பாடே சாவியாக இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

- கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை என்ற இந்த கோட்பாட்டை கற்றுக்கொள்கிறதினால் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை அவரின் பிறப்பிலிருந்து வெளிப்பட்டிருக்கிறதை அறிந்து கொள்கிறோம்.
- கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை என்கிற இந்த இறையியல் படிப்பின் மூலம் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை மானிடர் வாழ்வில் விரும்பதகுந்த மாற்றங்களை கொண்டு வருகிறது என்பதை அறிந்து கொள்கிறோம்.

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை அறிந்து அதை தெளிவாக புரிந்து, அதை நாம் விசுவாசிக்கின்ற பொழுது தான் நம்முடைய இரட்சிப்பின் அனுபவம் அர்த்தமுள்ளதாகவும், நம்முடைய விசுவாசம் பெலனுள்ளதாகவும், நம்முடைய சுபாவங்களில் மாற்றங்கள் ஏற்படுகிற நிலையும் உண்டாகிறது.

கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை

1. நித்தியமானவர் - ஏசாயா 9:6,7 இந்த வசனங்களை கவனித்துப் பார்க்கின்ற போது, கிறிஸ்து பாலகனாய் பிறந்து, குமாரனாக கொடுக்கப்பட்டார் என்பது தற்காலிக நிலை ஆனால் நித்திய பிதா என்று சொல்லப்பட்டிருக்கிறது. ‘நிரந்தரமான நிலை’ தெய்வீகத்திற்குரிய தன்மை ‘நித்தியத் தன்மை’ அது இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது.
2. மாறாதவர் - எபி 13:8, எபி 1:10-12 ல் சங்கீதம் 102ல் கூறப்பட்டுள்ளதை மேற்கோள் காட்டி “நீரோ மாறாதவராயிருக்கிறீர்” உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை. இயேசு கிறிஸ்து தன்னுடைய குணநலன்களில், உலகில், பரலோகில் இருக்கிறதில் மாறாதவராயிருக்கிறார்.
3. சர்வ வல்லமையுடையவர் - பிலி 3:20,21, வெளி 1:8 நாம் நம்மை அவருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கும் போது, எந்தவொரு சூழ்நிலையிலும் அவருடைய உதவியை நாடும்போது, வானத்திலும் பூமியிலும், சமுத்திரத்திலும் இவைகளிலுள்ள அனைத்தின்மேலும்

அதிகாரம் உடையவராகிய அவர், நம்முடைய வாழ்க்கையிலும் தம்முடைய சர்வ வல்லமையுள்ள தம்முடைய தன்மையை வெளிப்படுத்தி நம்மை ஆசீர்வதிப்பார்.

4. நித்திய ஜீவனை கொடுக்கும் - யோவான் 10:28 வல்லமையுடையவர்

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை சுட்டிகாண்பிக்கும் வசன ஆதாரங்கள்

பழைய ஏற்பாட்டில்

1. ஏசாயா 9:6

புதிய ஏற்பாட்டில்

1. ஏற்கனவே தான் பரலோகத்தில் இருந்தது, இனி இருக்கப்போகிறது பற்றி இயேசு கிறிஸ்து கூறினவைகள் - யோவான் 6:62, 8:23, 16:28, 17:5
2. தேவனுடைய அதிகாரத்தை தன்னில் உடையவரானதால் இயேசு கிறிஸ்து தெய்வீகத் தன்மையுடையவர்.

வசன ஆதாரங்கள்

1. ஓய்வு நாளின் மேல் அதிகாரம் - மத்தேயு 12:8, மாற்கு 2:28, லூக்கா 6:5

மனுகுலத்திற்கு பாவத்தை மன்னிக்கிற அதிகாரம் - மாற்கு 2:5-11

நித்தியத்தை குறித்து முடிவு செய்வதில் கிறிஸ்துவின் அதிகாரம் - யோவான் 8:24, லூக்கா 12:8,9, யோவான் 5:22, 27-29

பிசாசின் மேல் கிறிஸ்துவின் அதிகாரம் - மாற்கு 1:2-27, 3:11, 5:1-20

வியாதியின் மேல் கிறிஸ்துவின் அதிகாரம் (மாற்கு 1:29-31) மற்றும் சாவின் மேல் அதிகாரம் - மாற்கு 1:40-45, 5:25-43, 8:22-26

இயற்கையின்மேல் அதிகாரம் - லூக்கா 5:1-11, 8:22-25, 9:10-17

தேவனுக்கு மட்டுமே உடைமையாக இருக்கிறவைகளின்மேல் இயேசு கிறிஸ்து உரிமைகோரி இயேசு கிறிஸ்து தனது தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்தும் காரியங்கள். வசன ஆதாரத்துடன்

தேவனுடைய ராஜ்யத்தை குறித்து – மத்தேயு *13:41,42, 16:28*, லூக்கா *1:33*

தொழுகை மற்றும் ஜெபத்தின் மேல் கிறிஸ்து உரிமை கோருகிறார். மத்தேயு *24:30-31*, யோவான் *14:13, 14:14* அப்போஸ்தலர் *7:59*, வெளி *1:17*

மனுஷகுமாரன் என்கிற பெயரில் வரபோகிற மேசியாவாகிய தெய்வத்தன்மையுடையவர் என்பதை சுட்டிக்காண்பிக்கிற வசனங்கள் - தானி. *4:3*

தேவனுடைய குமாரன் என்று தன்னை கூறியதில் தெய்வீகத் தன்மையை கிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார். மத்தேயு *27:43*, யோவான் *5:18*

பிதாவைப் போலவே தானும் இருக்கிறவராக இருக்கிறேன் என்று கூறுகிறதிலிருந்து இயேசுவின் தெய்வீகத்தன்மையை நாம் அறிந்து கொள்ளலாம். யோவான் *8:58, 6:51, 10:9,11, 11:25, 14:6, 15:1*

பிதாவும் நானும்ஒன்றாயிருக்கிறோம் என்று கிறிஸ்து கூறுகிறார். யோவான் *14:9,10, 10:30, 12:45*

இயேசு கிறிஸ்து தெய்வீகத்தன்மையுடைய தேவனானவர் என்பதை வெளிப்படுத்தும் வசனங்கள்: யோவான் *1:1*, அப்போ *20:28*, ரோமர் *9:5*, *1* கொரி *1:24*, *2* கொரி *4:4*, பிலி *2:6*, கொலோ *1:15,16, 2:9*, தீத்து *2:13*, எபிரெயர் *1:3,8*, *2* பேதுரு *1:1*, *1* யோவான் *5:20*

**<u>கேள்விகள்</u>**

1. கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டியதின் அவசியம் என்ன அல்லது முக்கியத்துவம் என்ன என்பதைக்கூறுக?
2. கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மைகள் என்னென்ன? ஒவ்வொன்றையும் சற்று விளக்கமாக வசன ஆதாரத்துடன் எழுதுக?
3. எவை எவைகளின் மேலெல்லாம் கிறிஸ்துவுக்கு அதிகாரம் இருக்கின்றது என்பவைகளை வசன ஆதாரத்துடன் கூறி கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை நிரூபனம் செய்க?
4. கிறிஸ்து தன்னுடைய தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துகிற விதமாய், தேவனுக்கு மட்டுமே உடைமையாக இருக்கின்ற

எவைகளின் மேலெல்லாம் உரிமைகோரினார் என்பதை வசன ஆதாரத்துடன் கூறுக?